# சுவடு

## வெளியீடு – 09

**பழைய மாணவர் சங்கம்,**

**யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி,**

**கோப்பாய்.**

**27.12.2010**

# கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் 2009 /2010
## நிர்வாக சபை உறுப்பினர் விபரம்:

போஷகர் :- லயன் டாக்டர் வை. தியாகராசா

தலைவர் :- திரு. க. இ. இராசசேகரம் - அதிபர்

உபதலைவர்கள் :- திருமதி இ. சிவானந்தன்

திரு. K. தங்கவடிவேல்

திரு. க. ஸ்ரீஸ்கந்தராசா

திரு. G. T. ஞானசேகரவேல்

செயலாளர் :- திரு. க. விநாயகலிங்கம்

உபசெயலாளர் :- திரு. ப. சேவற்கொடியோன்

பொருளாளர் :- திரு. வே. சண்முகலிங்கம்

நிர்வாக உறுப்பினர்கள் :-

திரு. ஆ. ஜெயபாலசிங்கம்

திரு. வே. மகாலிங்கம்

திரு. ஐ. சிவலோகநாதன்

திரு. K. இராமச்சந்திரன்

திருமதி சாந்தினி வாகீசன்

திருமதி வி. பாலதாசன்

திருமதி நாகேஸ்வரி சிவபாதம்

திரு. க. பிரபாகரன்

திரு. செ. தவேஸ்வரன்

திரு. மு. நடராசா

திரு. இ. சங்கீத்

திரு. B. S. A அரியரட்ணம்

பத்திராதிபர் :- திரு. சி. சிவலிங்கம்

எண் பார்வையாளர் :- திரு. நா. சிவநாதன்

# அமரத்துவ அதிபர்கள்

| | | | |
|---|---|---|---|
| திரு. G. S. செல்லையா | 01.01.1945 | – | 30.04.1951 |
| திரு. T.W. இராசசேகரம் | 01.05.1951 | – | 31.07.1957 |
| திரு. E. C. A. நவரட்ணராசா | 01.09.1957 | – | 27.12.1963 |
| திரு. E. K. சண்முகநாதன் | 28.12.1963 | – | 31.05.1971 |
| திரு. M. கார்த்திகேசன் | 01.06.1971 | – | 31.12.1971 |
| திரு. S. சிவசுப்பிரமணியம் | 01.01.1972 | – | 11.07.1973 |
| திரு. S. செல்வரட்ணம் | 07.10.1980 | – | 27.10.1983 |
| திரு. N. சிவகடாட்சம் | 19.08.1996 | – | 11.10.2005 |
| திரு. S. கந்தசாமி | 01.09.1973 | – | 26.12.1974 |

## சுவடு

| இதழ் | வெளியிடப்பட்டது | ஆசிரியர் |
|---|---|---|
| 1 | 27.12.1997 | திரு. S. K. தங்கவடிவேல் |
| 2 | 27.12.1998 | திரு. ஆ. ஜெயபாலசிங்கம் |
| 3 | 20.02.2002 | திரு. இ. ரகுமார் |
| 4 | 27.12.2004 | திரு. S. K. தங்கவடிவேல் |
| 5 | 27.12.2005 | திரு. S. K. தங்கவடிவேல் |
| 6 | 27.12.2007 | திரு. சி. சிவலிங்கம் |
| 7 | 27.12.2008 | திருமதி உ. சுரேந்திரகுமார் |
| 8 | 27.12.2009 | திரு. சி. சிவலிங்கம் |
| 9 | 27.12.2010 | திரு. சி. சிவலிங்கம் |

# அதிபரின் உள்ளத்தில் இருந்து

எமது கல்லூரி 158 வருடங்களைக் கடந்து நூற்றாண்டின் பின் வைரவிழாவை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கின்றது. வருடா வருடம் நினைவு கூரப்படும் அமரத்துவ அதிபர் தினம் இவ்வருடமும் சிறப்பாக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கும் இவ்வேளையில் **'சுவடு'** என்ற மலர் புதுப்பொலிவுடன் வெளிவருகின்றது. ஆயிரம் பாட சாலைகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் எமது பாடசாலையும் உள்ள டக்கப்பட்டிருப்பது மிகுந்த மகிழ்ச்சிக்குரியது. சிறந்த முறையில் திட்ட மிட்டு இவ் அபிவிருத்திப் பணியை மேற்கொள்ள கல்லூரிச் சமூகத் தினர் உறுதுணையாக நிற்பார்கள் என எதிர்பார்க்கின்றேன்.

கல்லூரியின் பரீட்சை அடைவு மட்டம் தொடர்ந்து அதிகரித்துச் செல்கின்றது. ESDFP திட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்பட்ட பல செயற்றிட்டங்கள் பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்காலத்திலும் அதிகரிக்க உதவும். இவ்வருடம் 20க்கு மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகம், மற்றும் உயர்கல்வி பெறுவதற்கு தெரிவு செய்யப் பெற்றார்கள். இது எமது கல்லூரியின் கடந்த கால வரலாற்றில் மிகச் சிறப்பான விடயமாகும்.

எமது கல்லூரியின் இணைபாடவிதானச் செயற்பாடுகள் உயர்திறன் கொண்டவையாகக் காணப்படுகின்றன. மெய்வல்லுநர் போட்டி, குழுவிளையாட்டுக்கள், தமிழ்மொழித்திறன், ஆங்கில மொழித்திறன், கணித விஞ்ஞானம், வணிகப் போட்டி, சமூக விஞ் ஞானப் போட்டி, ஆக்கத்திறன் போட்டி அழகியல் போட்டி, கணனி ஆக்கத்திறன் போட்டிகளில் மாணவர்கள் பங்குபற்றி வெற்றிகள் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளார்கள். மேலும் மாவட்ட, மாகாண தேசிய மட்டங்களிலும் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. மேலும் எமது கல்லூரியின் கடந்த வருடச் சாதனைகள், சிறப்புக்கள் 2010 ஆம் ஆண்டுக்கான பரிசுநாள் அறிக்கையில் விபரமாகக் குறிப் பிட்டுள்ளேன்.

எதிர்வரும் காலங்களில் எமக்கு வழிகாட்டிகளாக அமைந்த முன்னாள் அதிபர்களின் சுவடுகளைப் பின்பற்றி சிறப்பான பல வேலைத் திட்டங்களை முன்னெடுப்போமாக.

நன்றி

**திரு. க இ. இராசசேகரம்**

அதிபர்,

யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

# செயலாளரின் உள்ளத்தில் இருந்து

இக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் அமரத்துவம் அடைந்த அதிபர்களை நினைவுகூரவும், அவர்களது சிறந்த சேவையினை நினைவுகூரவும் பின்பற்றவும் இச் '**சுவடு**' சஞ்சிகை வருடாவருடம் வெளிவருவது மகிழ்ச்சிக்குரியது. இக்கல்லூரியின் கல்வி அபிவிருத்திக்கும், மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாட்டிற்கும், கல்லூரியின் பெருமையை பல வழிகளிலும் வெளிக்கொணர்ந்த சிறந்த வழிகாட்டியாக திகழ்ந்தவர் அமரத்துவம் அடைந்த திரு. E.C.A நவரத்தினராசா அதிபர் அவர்கள். அவர் அமரத்துவம் அடைந்த நாளில் இச் சஞ்சிகை வெளியிடுவது பழைய மாணவர்களது தலையாய கடமையாகும்.

இச் சுவடு சஞ்சிகையை வெளியிட்டு ஆரம்பித்து வைத்த பெருமை அமரத்துவம் அடைந்த அதிபர் திரு. ந. சிவகடாட்சம் அவர்களையே சாரும். இவ்வருடம் சுவடு சஞ்சிகை - 9 ஆவது வெளியீடாக வெளிவருவது போற்றுதற்குரியது.

பழைய மாணவர் சங்கம் கல்லூரி அதிபர்கட்கு பூரண ஒத்துழைப்பு வழங்கி கல்வி அபிவிருத்திக்கும், பரிசளிப்பு விழா, விளையாட்டுப் போட்டி, ஆசிரியர் தினம், ஏனைய விஷேட விழாக்கட்கும் பல வழிகளிலும் நிதி உதவி செய்து வருகிறது. கொழும்புக் கிளை பழைய மாணவர் சங்கமும் எங்கட்கு பல வழிகளிலும் நிதி உதவி அளித்து வருகிறது.

இக் கல்லூரியின் தற்போதைய அதிபர் திரு. க. இ. இராசசேகரம் அவர்கள் பழைய மாணவர். இவர் கல்லூரி வளர்ச்சிக்கும், மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், ஒழுக்கம், கட்டுப்பாடு என்பனவற்றிற்கும் ஆசிரியர்களின் பூரண ஒத்துழைப்பைப் பெற்று நிர்வாகத்தை சிறப்பாக நடாத்துகிறார். ஆசிரியர்களின் கற்பித்தலால் மாணவர்கள் G.C.E. O/L , G. C. E. A/L பரீட்சைகளில் சிறந்த பெறுபேற்றினைப் பெறுகிறார்கள். இவ்வருடத்தில் பல்கலைக்கழகத்திற்கு 20 மாணவர்கள் தெரிவாகியுள்ளனர். பாராட்டுதலுக்குரியது.

தற்போதைய அதிபர் எடுக்கும் நடவடிக்கைகட்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கமும் இணைந்து பூரண ஒத்துழைப்பு வழங்கும்.

**திரு. க . விநாயகலிங்கம்**
செயலாளர்,
பழைய மாணவர் சங்கம்.

# நான் அறிந்த அதிபர்

யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் வளர்ச்சியில் அரிய சேவையாற்றிய அதிபர்களின் வரிசையில் குறிப்பிடத்தக்கவர் அமரர் ந. சிவகடாட்சம் எனலாம். கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் வடக்கை வதிவிடமாகவும் கொண்ட இவர் 1986 தொடக்கம் 1991 வரை எமது கல்லூரியின் ஆசிரியராகவும், 1996 தொடக்கம் 2005 வரை அதிபராகவும் கடமையாற்றினார். இயல்பாகவே சமூகத்திடம் பற்றும், மானிடத்தை நேசிக்கும் பண்பும், இறை நம்பிக்கையும் கொண்ட இவர் கோப்பாய்க் கிராமத்தையும், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியையும் ஆழமாக நேசித்த ஒருவராவார்.

இவர் அதிபராகச் சேவையாற்றிய காலத்தில் அவருடன் சேர்ந்து பணியாற்றிய ஒருவன் என்றவகையில் அவரது சேவையைப் பற்றி எழுத வேண்டும் என்ற வேணவா எனது மனதில் இருந்தது. இக் கட்டுரையின் வாயிலாக அன்னாரின் அளப்பரிய பணிகளை நினைவு கூருவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

நான் 1995 ஆம் ஆண்டு இக்கல்லூரிக்கு ஆசிரியராக வந்தபோது கோப்பாய் பூதர்மடத்தில் இயங்கிய கோட்டக்கல்வி அலுவலகத்தில் ஒரு அதிகாரியாகப் பணியாற்றிய இவர் ஒருநாள் எனது சம்பள விடயமாக அவ் அலுவலகத்திற்கு நான் சென்று அங்குள்ள கதிரை யொன்றில் காத்திருந்தபோது தானே எழுந்து வந்து விடயத்தை வினவி உங்களுக்குச் சம்பளம் போடப்படும் என்று கூறி என்னை அனுப்பி வைத்தார். அவ்விடத்தில் அவரை நான் ஒரு மனிதாபிமானம் மிக்க அதிகாரியாகக் கண்டுகொண்டேன்.

1995 ஆம் ஆண்டில் குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ் நிலையின் காரணமாக அதுவரை கல்லூரியின் அதிபராகக் கடமை யாற்றிய திரு. த. முத்துக்குமாரசாமி அவர்கள் கொழும்பிற்குச் சென்ற தன் காரணமாக கல்லூரிக்கு அதிபர் இல்லாத காரணத்தினால் அன்னார் 1996 ஆம் ஆண்டு அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

அவர் கல்லூரியைப் பொறுப்பேற்ற சந்தர்ப்பத்தில் பாடசாலைக் கட்டிடங்கள் சேதமடைந்தும் ஆவணங்கள் சிதறிய நிலையிலும் காணப்பட்டன. அதிபர் அறையிலிருந்த மாணவர்களின் பிறப்புச்

சான்றிதழ்கள் மற்றும் ஆவணங்கள் ஒழுங்கற்றுக் காணப்பட்டன. அவற்றில் சேதமடைந்த ஆவணங்களை அகற்றி ஏனைய ஆவணங் களை ஒழுங்கமைத்தார். நவரத்தினராஜா மண்டபத்தின் மேல் மாடி யில் இயங்கிய நூலகம் கூரையில் ஏற்பட்ட சேதங் காரணமாக அழிவடைந்திருந்தது. இதனையும் தனது கடின முயற்சியினால் ஒழுங்க மைத்ததுடன் ஒவ்வொரு வருடமும் ஒரு வாரத்தை **'நூலக வாரம்'** எனப் பிரகடனப்படுத்தினார்.

அவ்வாரத்தில் பாடசாலையின் பழைய மாணவர்கள், மற்றும் நலன்விரும்பிகளை விருந்தினர்களாக அழைத்து அவர்கள் மூலம் பல புத்தகங்களைப் பெற்றும், மாணவர்களையும், ஆசிரியர்களையும் தமது பிறந்ததின ஞாபகமாக நூலகத்திற்கு புத்தகங்களை அன்பளிப் பாக வழங்க ஊக்குவித்தும் நூலகத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தைப் புனரமைத்து, அதில் பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறையுள்ளவர்களை நிர்வாக சபை யில் இணைத்து அதன்மூலம் பாடசாலைப் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டார். 1997 இல் குடாநாட்டில் புனரமைப்புப் பணிகளை ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனமாகிய G.T.Z மேற்கொண்டது.

அந் நிறுவனம் எமது பாடசாலையையும் தெரிவுசெய்து சேத மடைந்த கட்டிடங்களைப் புனரமைக்க முன் வந்தது. அந்நிறுவனம் புனரமைக்க வேண்டிய பொருட்களையும், கூலியின் ஒரு பகுதியை யுமே வழங்கியது. கூலியின் ஒரு பகுதியைப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பொறுப்பேற்க வேண்டியிருந்தது.

எனவே அதிபர் இவ் உதவியைப் பயன்படுத்தி சேதமடைந்திருந்த கட்டிடங்களின் ஓடுகளைச் சரிப்படுத்தியதுடன் நவரத்தினராஜா மண்டபத்தின் ஓடுகளை முற்றாக மாற்றி G . T. Z இன் ஓடுகளைப் போட்டு பயன்பாட்டிற்கு உரியதாக அதனை மாற்றினார். அத்துடன் 125 ஆம் ஆண்டு நினைவு மண்டபத்தின் மேடையையும் மேற்கிலிருந்து கிழக்குப் பக்கத்திற்கு மாற்றியதுடன் அதன் வாசலை மேற்குப் பக்கமாக மாற்றி அமைத்தார்.

இவ்வேலைகளின் போது அவர் தனது முழுமையான உழைப்பை யும், அறிவையும் பயன்படுத்தி ஒரு வேலையில் சேமித்த பொருட்களை

யும், நிதியையும் சமயோசிதமாக மற்றைய வேலைக்குப் பயன்படுத்தி பாடசாலைக்கு உச்சப்பயனைப் பெற்றுக் கொடுத்தார்.

எமது கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்றது முதல் மறையும் வரை பாடசாலையைத் தனது உயிராகக் கருதி காலை முதல் மாலை வரை முழுநேரமும் கல்லூரியிலிருந்து சேவையாற்றினார். இவ்வாறு தனது முழு நேரத்தையும் பாடசாலையில் செலவிட்டமையினாலேயே இவ்வேலைகளை இவரால் திட்டமிட்டுச் செயலாற்ற முடிந்தது.

அக்காலத்தில் இந்து மாணவர்களின் வழிபாட்டு இடமாக நினைவு மண்டபமே இருந்தது. அங்கேயே இந்துக் கடவுள் படங்கள் வைக்கப் பட்டு இருந்தது. மண்டபப் புனரமைப்பின்போது அவற்றை அங்கிருந்து அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்குத் தீர்வாக பிரார்த்தனை மண்டபம் ஒன்றை அமைப்பதற்குத் தீர்மானித்து தற்போது ஹட்சின்ஸ் மண்டபத்திற்கு முன்னால் காட்சியளிக்கும் கட்டிடம் அமைக்கப்பட்டு பிரார்த்தனைக்காகப் பயன்படுத்தப்பட்டது.

இதே நேரத்தில் கிறிஸ்தவ மாணவர்களுக்கான வகுப்பறையாகப் பயன்படுத்தப்பட்ட கட்டிடத்தைப் புனரமைத்து அவர்களின் பிரார்த் தனைக்கும் வழி செய்து கொடுத்தார். இது அவரின் எல்லோரையும் ஒன்றாக நோக்கும் பண்புக்கோர் எடுத்துக்காட்டு எனலாம்.

இக்கால கட்டத்தில் அரசில் பங்குவகித்த ஈழமக்கள் சனநாயகக் கட்சியின் உதவியையும் பெற்றுப் பாடசாலையின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தினார். தற்பொழுது கூடைப்பந்தாட்டத்திடல், வலைப் பந்தாட்டத்திடல் அமைந்துள்ள இடம் அப்பொழுது உயர்ந்த மேடா கவும் பாரிய மரங்கள் நிறைந்தும் காணப்பட்டது. அதனைச் சமப்படுத்த வேண்டின் பாரிய மனித வலுவைப் பயன்படுத்த வேண்டிய தேவை இருந்தது. அதனை ஈழமக்கள் சனநாயகக் கட்சி மூலமாக இராணுவத்தினரின் புல்டோசரின் உதவியுடன் நிறைவேற்றினார்.

அத்துடன் யாழ்ப்பாணத்திலுள்ள பெரிய பாடசாலைகளுக்கு இணையாக எமது கல்லூரியிலும் கொழும்பு பழைய மாணவர் சங்கத் தினரின் உதவியுடன் கூடைப்பந்தாட்டத்திடலை அமைத்தார். இம் மைதானம் அமைப்பது பாரிய வேலைத்திட்டமாகும். இதனையும் பொருத்தமானவர்களின் உதவியைப் பெற்று நிறைவேற்றினார்.

அன்னார் பாடசாலைப் புனரமைப்புப் பணிகளுடன் மாணவர்களின் ஆளுமை வளர்ச்சியிலும் அக்கறை கொண்டு செயலாற்றினார். இதற்காகப் பல மாணவர் மன்றங்களை ஆரம்பித்தார். தமிழ் மன்றம், கணித, விஞ்ஞான மன்றம், வணிக மன்றம், கவின்கலை மன்றம், இந்து மன்றம், கிறிஸ்தவ மன்றம் அவற்றுள் முக்கியமான மன்றங்களாகும். இவற்றின் மூலம் பாடசாலையில் விழாக்களை நடாத்தியதுடன் மாண வரின் தலைமைத்துவப் பண்பு, மாணவரின் பேச்சாற்றல் என்பவற்றையும் வளர்த்தெடுத்தார்.

இவரது காலத்தில் நிறைவேற்றப்பட்ட மற்றுமொரு பாரிய பணி நீண்டகாலமாக அடித்தளமிட்ட நிலையில் நிறைவேற்றப்படாமலிருந்த கட்டடத்தை இருமாடிக் கட்டிடமாக அமைத்தமையாகும். இவ்வாறு இவரால் முன்னெடுக்கப்பட்ட பெரும்பணி இன்று தரம் 9, 10, 11 நூலகம், கணனி அறை என கல்லூரியின் எழிலைப் பறைசாற்றி நிற்கின்றது. இப்பணியை நிறைவேற்றுவதற்கு பணத்தை முற்கூட்டியே செலவழிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

அதற்காக வர்த்தக நிலையங்கள், நலன்விரும்பிகள், ஆசிரியர்கள் ஆகியோருடன் தொடர்புகொண்டு அவர்களிடமிருந்து வேண்டிய பண உதவி, பொருளுதவி என்பவற்றைப் பெற்றுக்கொண்டதுடன் தனது சொந்தப் பணத்தையும் பயன்படுத்தினார். அவ்வேலைகளின் போது தொழிலாளர்களுடன் இணைந்து செயற்பட்டார்.

குறித்த வேலையை குறித்த நேரத்தில் முடிக்க வேண்டுமென அதிபர் நினைத்தால் அதற்கான ஆள் உதவி இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? தனியொருவனாக நின்று தானே அவ் வேலையைச் செய்யும் ஆற்றலும், மதிநுட்பமும், மனத்திடமும் அன் னாரிடம் அதிகமாக இருந்தமைதான் அவர் இப் பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற உதவி புரிந்தது. இவ்வாறு செயற்படுவதற்கு இவரது குடும்பத்தினரும் மிகுந்த ஒத்துழைப்பை வழங்கியமை குறிப்பிட்டுக் கூறவேண்டியதாகும்.

அமரர் சிவகடாட்சம் அவர்கள் அதிபராகப் பதவிவகித்த கால மாகிய 2002 ஆம் ஆண்டு பாடசாலையின் 150 ஆவது ஆண்டாகும்.

அதனைச் சிறப்பாகக் கொண்டாட பாடசாலைச் சமூகத்தினர் முன் வந்தபோது திரு. ந.சிவகடாட்சம் அவர்கள் அதனை ஏற்றுக்கொண்டார்.

அதற்காக அவர் ஒரு வருடம் முன்பாகவே செயற்படுத்த வேண்டிய நிகழ்வுகளைத் திட்டமிட்டார்.

முத்திரை வெளியீடு, பழைய மாணவர்கள், ஆசிரியர்களைக் கௌரவித்தல், சமய நிகழ்வுகளை நடாத்துதல், குடாநாட்டிலுள்ள கலைஞர்கள், சேவையாளர்களைக் கௌரவித்தல், கலை நிகழ்வுகள், சஞ்சிகை வெளியீடு என பாரிய நிகழ்வுகளைக் கொண்டதாக அமைய வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இதற்காக அன்னார் தனது முழுமை யான நேரத்தையும், உழைப்பையும் வழங்கி விழாவைச் சிறப்பாக நடாத்தி முடித்தார்.

150 ஆவது விழாவின் ஒரு அங்கமாக ஒவ்வொரு மாதத்திலும் பௌர்ணமி நாளில் ஒரு தடவையில் இரண்டு அல்லது மூன்று கலைஞர்கள், எழுத்தாளர்கள் என அழைத்து அவர்களுக்குப் பொன் னாடை போர்த்தியும், வாழ்த்துப் பா வழங்கியும் கௌரவித்தார்.

அத்துடன் அவ் ஆண்டின் மாத இறுதி மூன்று தினங்கள் காலை யும், மாலையும் பட்டிமன்றம், மங்கள இசை, பேச்சு, நாடகம், இசை நிகழ்ச்சி போன்ற நிகழ்ச்சிகளை உள்ளடக்கிய கலை விழாவை நடாத்தினார். இவற்றில் குடாநாட்டின் சிறந்த கூத்து நாடகங்கள் மேடையேற்றப்பட்டன. இவை அவரின் கலை ஆர்வத்தை வெளிக் கொணர்வதாக அமைந்தன.

எமது அதிபரின் பன்முகப் பணிகளில் ஒன்றாக அமைவது பாடசாலையின் சூழலை கவின் நிலையில் பேணவேண்டுமென் பதற்காக அவர் மேற்கொண்ட செயற்றிட்டங்கள் எனலாம். அதற்காக மரநடுகை, பூந்தோட்டம் என்பவற்றுடன் தமிழ்ச் சங்கத்தினர் ஆண்டு தோறும் முன்னெடுக்கும் தமிழ்விழாவின் போது ஒவ்வொரு செயற் றிட்டங்களை முன்னெடுக்கச் செய்து செயற்படுத்தினார்.

தமிழ்த் தாய்சிலை, திருவள்ளுவர் சிலை, ஔவையார் சிலை என்பவற்றையும் நிறுவினார். இலங்கையின் புகழ்பெற்ற தமிழறிஞர் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்களின் பணிகளை கௌரவிக்கும் முகமாக அவரின் சிலையை பாடசாலையின் நினைவு மண்டபத்திற்கு அருகாமையில் நிறுவியதுடன், சி. வை. தாமோதரம்பிள்ளை ஒரு நோக்கு என்ற நூலை வெளியிட்டு அதன் ஆய்வுரையை யாழ்

பல்கலைக்கழக பகுதிநேர விரிவுரையாளரான திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள் மூலம் தமிழ் விழாவின் போது நிறை வேற்றினார்.

இவ்வாறாக அன்னாரின் சிந்தனை பாடசாலை வள அபிவிருத்தி யுடன் மட்டும் நின்று விடாது தமிழ், சமயம், கலை, கலாசாரம் எனப் பல துறைகளிலும் பரந்து சென்றதை நாம் அவதானிக்கலாம். இவை மட்டுமல்லாமல் பாடசாலையையும் சமூகத்தையும் இணைத்து தான் நினைத்ததை சாதித்த ஆளுமைமிக்க அதிபர் எனலாம்.

பாடசாலையின் பழைய மாணவர்களின் இளைஞர்களை ஒன்றி ணைத்து கோப்பாய் ஐக்கிய விளையாட்டுக் கழகம் என்ற அமைப்பை ஏற்படுத்தி கல்லூரியுடன் ஒன்றிணைத்துச் செயற்பட வைத்தார். பாட சாலையில் இக்கழகத்தினூடாக விளையாட்டு நிகழ்ச்சிகள் நடைபெற ஊக்குவித்தார்.

மின்னொளியில் கூடைப்பந்தாட்டம், உதைப்பந்தாட்டம், கரப்பந் தாட்டம் என்பவற்றில் பல போட்டிகளை நடாத்தி இளைஞர்களின் உடல் உள வளர்ச்சிக்குக் களம் அமைத்துக் கொடுத்தார். இவ்வாறாக அதிபர் அவர்களின் சிந்தனை பாடசாலை, சமூகம் என்பவற்றைச் சுற்றியே இருந்தது. இவற்றைச் சாதிப்பதற்கு இவர் தனது முழு நேரத்தையும் பாடசாலையில் செலவிட்டமையே முதற் காரணமென்று கூறலாம்.

இங்கு இவரின் குடும்பத்தைப் பற்றியும் கூறாமல் விட முடியாது. இவர் தனது மூன்று பிள்ளைகளையும் கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி என்பவற்றில் மட்டுமே சேர்த்துக் கல்வி கற்பித்தார். இவர் மற்றைய பெற்றோரைப் போன்று தனது பிள்ளைகளின் கல்வியில் கவனம் செலுத்தியது கிடையாது.

ஆனால் "ஊரார் பிள்ளை தலை தடவ தன் பிள்ளை தானே வளரும்" என்பது போல அவரது முதல் இரு பிள்ளைகளில் ஒருவர் கலைப்பட்டதாரியாகவும் ஒருவர் பொறியியல் பட்டதாரியாகவும் ஆகியுள்ளனர். அவரது மகன் ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து கல்வி கற்பதும் குறிப்பிடத்தக்கது.

கல்லூரியின் வளர்ச்சி ஒன்றையே தனது உயிர்மூச்சாகக் கொண்டு செயற்பட்ட இவர் அதன் வளர்ச்சிக்காகவே அரசியல் கட்சிகளின் உதவியை நாடவேண்டிய தேவை ஏற்பட்டது. அதனாலேயே அவர் அரசியலில் ஈடுபட வேண்டியதாயிற்று. அதுவே அவரின் உயிர் பிரிவதற்கும் காரணமாயிற்று.

இங்கு யோகர்சுவாமியின் "எப்பவோ முடிந்த காரியம்" என்ற கூற்றையும் கவனத்திற் கொள்வோம். உடல் அழியும் ஆன்மா அழியாது. எமது அன்பிற்குரிய அதிபரின் ஆத்மா கல்லூரித் தாயின் ஆன்மாவுடன் கலந்து என்றும் கல்லூரி வளர்ச்சிக்குத் துணை நிற்கும் என்பது மட்டும் உறுதி.

**செ. பகீரதன்**
**ஆசிரியர்,**

**யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.**

# அமரர் முருகுப்பிள்ளை கார்த்திகேசன் BA
## (01.06.1971 – 31.12.1971)

அமரர் முருகுப்பிள்ளை கார்த்திகேசன் 25.06.1919 இல் மலாயாவில் பிறந்தார். ஆரம்பக்கல்வியை வட்டுக்கோட்டை திருஞானசம்பந்த வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை மலாயா "தைப்பிங்" ஆங்கிலக் கல்லூரியிலும் கற்று கொழும்பு பல்கலைக்கழகத்தில் தமது பட்டப்படிப்பைத் தொடர்ந்து ஆங்கிலத்தில் கலைப்பட்டதாரியானார்.

1946 - 1970 வரை யா / இந்துக் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றினார். 1971 தை தொடக்கம் வைகாசி வரை பதில் அதிபராகக் கடமையாற்றினார்.

எமது யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் 01.06.1971 இல் அதிபராக நியமிக்கப்பட்டார். 01.01.1972 இல் யா /பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று தொடர்ந்து அதிபராகக் கடமையாற்றி 25.07.1977 இல் ஓய்வுபெற்றார். 10.09.1977 இல் அமரரானார்.

அவர் சாதி, மதபேதம் என்றும், ஏழை, பணக்காரன் என்றும் ஏற்றத்தாழ்வு என்றும் பார்ப்பதில்லை. சமதர்மவாதி. நேர்மையானவர். எளிமையான ஆடை அணிவார். கலகலப்பாக கண் புருவமுயர்த்திக் கதைப்பார். இனிமையாகப் பழகுவார்.

அவர் எனது ஆசான். நான் யா / இந்துக் கல்லூரியில் க.பொ.த (சா/த) தமிழ்பாஷை ஆபாடத்திட்டம் கற்றபோது தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கும். ஆங்கிலத்திலிருந்து தமிழிற்கும் மொழி பெயர்ப்பைக் கற்பித்தார். நேரம் போவதே தெரியாது. பாடத்தை இலகுவான வழியில் கற்பித்து முழு மாணவர்களும் தனது பாடத்தில் தேர்ச்சியடையச் செய்தார்.

அவர் கற்பிக்கும் போது நகைச்சுவையுடன் கற்பிப்பார். "ஈயார் தேட்டை தீயார் கொள்வார்" எனும் முதுமொழியை "ஈயத்தோட்டை தீயார் கொள்ளார்" என்று கண் சிமிட்டி புன்முறுவலுடன் நகைச்சுவை யாகக் கூறியது இன்றும் என்மனத்தில் பசுமரத்தாணி போல் நினைவை விட்டு நீங்காமல் பதிந்துள்ளது.

அவர் ஒரு சமயத்தில் மொழிபெயர்ப்புப் பாடம் நடைபெறும் போது ROAD ஐ அகலமாக்க என்ன செய்ய வேண்டும் எனக் கேட்டார். றோட் மரங்களை, வேலிகளை வெட்ட வேண்டும் என்றும் மதில்களை உடைக்க வேண்டும் என்றும் பலவிதமாகக் கூறினோம். அவர் வழமையான புன்முறுவலுடன் நகைச்சுவையாக ROAD இற்கு முன் னால் Bயை போட்டால் BROAD (அகலமாக) வரும் என்று கூறிய போது எல்லோரும் சிரித்தோம்.

யா / இந்துக் கல்லூரியில் நான் "சபாபதி" இல்லத் தலைவனாக இருந்தபோது அவர் எமது இல்லப் பொறுப்பாசிரியர்களில் ஒருவராக இருந்தார். வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிக்கு எம்மை உற்சாகப்படுத்தினார். ஐந்து இல்லங்களுள் எமது இல்லம் இரண்டாவ தாக வந்தபோது, வெற்றியைக் கொண்டாட நாம் நிதி சேகரிக்க அவரிடம் சென்றபோது தனது காற்சட்டைப் பொக்கெற்றில் கை வைத்து இருந்த பணம் அவ்வளவையும் கொடுத்தார்.

கணிசமான தொகை நாம் எதிர்பார்க்கவில்லை. இதே மாதிரித் தான் தனது சம்பளப் பணத்தில் கணிசமான தொகையை தனது மனைவி மக்களுக்குத் தேவையாக இருக்கும் என்றும் பாராமல் அவரிடம் உதவி கேட்டு வருபவர்களுக்கு, வலதுகை கொடுப்பது இடது கைக்குத் தெரியா வண்ணம் தானம் செய்துவிடுவார்.

இன்றும் அமரர் மு. கார்த்திகேயன் பதில் அதிபராக யா / இந்துக் கல்லூரியில் இருந்தபோது கையொப்பமிட்ட எனது க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறுப்பிரதி அவரை நினைவுகூர ஆவணமாகவுள்ளது.

எமது யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் அவர் அதிபராக 01.06.1971 இல் கடமையேற்ற போது நான் அகமலர்ந்து கல்லூரி

அலுவலகம் சென்றபோது அவரது மாணவனான என்னை இனம்கண்டு தனது மேசை முன்னால் உள்ள கதிரையில் என்னை அமரச் செய்து குசலம் விசாரித்து விரைவில் அரசாங்க வேலையில் சேர்வாய் என ஆசீர்வதித்தார். என்னோடு மட்டுமல்ல எல்லோருடனும் இவ் விதமாக இங்கிதமாக, சந்தோஷமுறும் வண்ணம் அளவளாவும் பண்பாளர்.

இறுக்கமான சட்டதிட்டங்களுடன் இயங்கிய இக் கல்லூரியில் கட்டுப்பாடுகளைத் தளர்த்தி, தண்டனை கொடுக்காமல் மாணவர் களை அன்பாலும் அறிவுரை கூறுவதன் மூலமும் அவர்கள் தவறுகளை உணர்ந்து திருந்தி வாழ வழிகாட்டியவர்.

இக்கல்லூரியின் அதிபராக சொற்ப காலம் இருந்தாலும் '**நவரத்தினராஜா நினைவு மண்டபம்**' கட்டிட வேலைகளுக்கு நிதி சேகரிக்க பல வழிகளிலும் உதவினார். இன்றும் இக்கல்லூரியின் '**கார்த்திகேசன் மண்டபம்**' அவரை நினைவுகூர்ந்து நிற்கிறது.

**திரு. வே. சண்முகலிங்கம்**
**கல்லூரி பழைய மாணவனும்,**
**ஓய்வுபெற்ற சிரேஷ்ட கணித ஆசிரியரும்.**

# என்னைக் கவர்ந்த அதிபர்
# ஈ. கே. சண்முகநாதன்

திரு. ஈ. கே. சண்முகநாதன் அவர்கள் மிகவும் இனிமையானவர். பார்ப்பதற்கு எடுப்பான தோற்றம் கொண்டவர். நீளக்கை சேட் அணிந்து கழுத்துப் பட்டியும் அணிந்து வருவார்.

வீட்டிலிருந்து வலப்பக்கமாக நடந்து பாடசாலைக்கு வருவார். இதைப் பார்த்து மாணவர்களும் வலப்பக்கமாக நடந்தனர்.

பாடசாலை மாணவரிடையே ஒற்றுமையை வளர்த்தார். கல்விப் பொது தராதரப் பத்திர பரீட்சைக்கு தோற்றுவதற்கு மாணவர்களை ஆயத்தம் செய்யுமுகமாக கடைசித் தவணைக் காலத்தில் மாதம் ஒரு பரீட்சையை நடாத்தினார்.

இதற்கான செலவாக ஒரு பரீட்சைக்கு ஒரு ரூபாய் மட்டும் அறவிட்டார். பாடசாலையில் கூட்டுறவுத்துறையை வளர்த்தவர். நீர்வேலியில் சிறுவர் பராமரிப்பு நிலையம் ஒன்றை நிறுவினார்.

அவர் நேர்மையாக செயல்பட்டவர். மத்திய கல்லூரியின் அதிபராகவும் இருந்தவர். பின்பு கல்வியதிகாரியாக பதவி உயர்வு பெற்றுச் சென்றார்.

அவர் பாடசாலையில் ஆங்கிலம் படிப்பிக்கும் போது அன்பாக அலுக்கோசுகள் என்று மாணவர்களை அழைப்பார். அன்னார் எமது கல்லூரியின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் மறக்க முடியாதவை.

**திரு. க. இராமச்சந்திரன்**
**வேலை அத்தியட்சகர்,**
**வலி - தெற்கு,**
**பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

# A Dedicated Teacher

Teaching is a noble profession and and to be in that capacity continuously for more than three decades in the same institution is no doubt a remarkable and a commendable achievement.

Mrs. Lilly Thavamany Williams contributed sincere and invaluable services in Kopay Christian College. She had earned an indelible image.

Mr & Mrs. Williams joined the staff of Christian College in 1934. However, owing to Mr. Williams' ill health, he had to leave Christian College and find a school in the town for his own convenience. But Mrs Williams continued her services at Christian College. She used to travel from the town daily.

Mrs. Williams was a very efficient teacher of English. She was highly duty conscious. Punctuality and good habits were her main goals. She taught these along with usual class room lessons. The students too obeyed her and learnt them well. However, there were unruly and mischievous children too. She was very "tough" with such "rough" elements. She used to warn and punish them.

I Studied under Mrs. Williams and I can still remember the good old days when some of my fellow - mates used to tremble in the class room infront of Mrs. Williams. She was a stern disciplinarian. All these qualities of Mrs. Williams remind me of

Oliver Goldsmith's poem "The Village School Master". The following lines of the poem fit in well to Mrs. Williams' qualities.

" A man severe he was and stern to view".

" The tremblers learned to trace the day's disasters in his morning face".

"Full well the busy whisper circled round.

My fellow - mates were really like the 'tremblers" as the poet describes in the poem. We guessed and imagined how the day going to be when we saw the expression of her face. Just like the way the village school master's pupils had laughed with counterfeited glee, we too laughed when Mrs. Williams laughed. We pretended to be happy and gay when she was happy and gay though we were in panic.

Though Mrs. Williams was strict, yet she was kind, religious and pitiful. She was a helper of the poor and a regular church goer. "Blessed are the merciful for they shall obtain mercy". This was said by Lord Jesus Christ, Mrs Williams practised this in her own life on several occasions. She was indeed a true christian.

Mrs. Williams loved the people of Kopay very much. She liked their ways of living. She knew all details of every student. She was so much interested in the welfare of every family in the village. She attended most of the events and functions such as weddings and funerals in Kopay. She was greatly concerned with their happiness and sorrow. She shared them with the villagers.

Mrs Williams created thousands of good citizens who are holding high posts in various capacities in our country as well as in foreign countries. They do contribute good services to the countries where they live in. As Mrs. Williams was well versed in English, she was an asset to Kopay Christian College, until the time of her retirement. During her time, children produced very good results.

Mrs. Williams laid great emphasy on methodical and systematic work in class rooms. She paid personal attention on each and every student.

Mrs Williams was a loving mother, a good wife a sincere teacher, and a right person to guide each and every person. No doubt, she can be called "a lady one in a thousand". Mrs Williams our esteemed teacher had fought a good fight and had finished her course. Although she is no more, she will be ever remembered by her students. May her soul rest in Peace!

- B. S. A. Ariyaratnam

*A Loyal Old Student*

# குடாநாட்டு மாணவர்களின் ஒழுக்கநெறி மேம்பாடும், நவீன இலத்திரனியல் ஊடகங்களும்

**'ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்**
**உயிரினும் ஓம்பப் படும்'**

*என்பது பொய்யாமொழிப் புலவரின் திருவாக்கு. ஒழுக்க நெறியானது உயிரினும் மேலானது என்று கூறுகின்ற திருவள்ளுவர்.*

**'கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக'**

*என்று கல்வி முறைமைக்கும் வரைவிலக்கணம் கூறுகின்றார்.*

*இன்றைய மாணவர்களே நாளைய சமூகத்தின் தலைவர்கள். எதிர்காலச் சமூகத்தை நல்வழிப்படுத்துபவர்கள் - கட்டுக்கோப்பான மனித சமூகத்தை கட்டியெழுப்பும் சிற்பிகள்.*

*இன்றைய போட்டிமுறைக் கல்விக் கலாசாரத்தில் எதற்கெடுத் தாலும் போட்டி - ஆடுவதற்கும் போட்டி, பாடுவதற்கும் போட்டி முற்றத்தில் கோலம் போடுவதற்கும் போட்டி, போட்டிகள் மலியும்போது பொறாமைகள், வெறுப்புகள், பகைமை உணர்வுகள் என்பனவும் மலிந்து கல்வி முறைமையின் உன்னத இலக்கானது "சிறந்த பரீட்சைப் பெறுபேறுகள்", "போட்டிகளில் வெற்றி" போன்ற குறுகிய வட்டத்தினுள் அடங்கிப் போவதையும் தவிர்க்க முடியாது. அன்பு, இரக்கம், பெரியோரை மதித்தல் போன்ற மனித விழுமியங்கள் எமது சமூகத்தில் மறைந்துகொண்டு வருகின்றன.*

*தூரநோக்கில் பார்க்கும்போது இதனால் ஏற்படும் விளைவு என்ன?*

*உயர்ந்த பரீட்சைப் பெறுபேறுகளைப் பெறுகின்ற மனித இயந்திரங் களை உருவாக்கும் தொழிற்சாலைகளாக கல்விக் கூடங்கள் மாறிக்கொண்டிருக்கின்றன.*

## மாணவர்கள்

*குழந்தைகள், பெரியவர்கள், நோயாளிகள், மதகுருமார்கள், மாணவர்கள் போன்ற பல்வேறு அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு*

சமூகத்தில் பாடசாலை மாணவர்கள் என்ற நிலைக்கு கூடுதலான மதிப்பும் கௌரவமும் வழங்கப்படுகின்றது என்பது யாவரும் அறிந்ததே.

**காரணம் என்ன?**

இன்றைய மாணவர்களே நாளைய சமூகத்தை நல்வழிப்படுத்தும் தலைவர்கள். அத்துடன் ஒழுக்கநெறி மிகுந்தவர்களே பாடசாலை மாணவர்கள்.

அதாவது பாடசாலை மாணவர்களிடம் இருந்து ஒழுக்கநெறியை அகற்றுவது மிகவும் கடினம்.

உயிர் இருக்கும்போது மட்டுமே உடலுக்கு உன்னதமான கௌரவம். இதுபோன்று ஒழுக்கநெறி மேம்பாடு அடையும்போது மட்டுமே மாணவர்களுக்கு சமூகத்தில் உயர்ந்த நிலை வழங்கப்படுகின்றது. அதாவது ஒழுக்கநெறி குறைத்த நிலையில் மாணவர்கள் சமூகத்தில் உயர்ந்த நிலையை அடைவது மிகவும் கடினம்.

## விந்தைமிகு விஞ்ஞான உலகம்

அண்மையில் சிசிலி நாட்டில் நிலக்கரிச் சுரங்கத்தினுள் அகப்பட்ட சுரங்கத் தொழிலாளர்கள் 30 பேர் ஏறக்குறைய 50 நாட்களின் பின் உயிருடன் மீட்கப்பட்டு இருக்கின்றனர். இதுதான் விஞ்ஞானத்தின் விந்தை. இன்று மிகக் குறைந்த செக்கன்களில் செய்திகளைப் பரிமாற்றம் செய்யக்கூடிய தொலைத்தொடர்புச் சாதனங்களும் மிகக் கூடிய வேகத்தில் செல்லக்கூடிய போக்குவரத்துச் சாதனங்களும் இருப்பதனால் உலகம் சுருங்கி விட்டது என்ற கருத்தில் பூமியானது புவிக்கோளக் கிராமம் (Global Village) என்று அழைக்கப்படுகின்றது.

இவ்வாறு மனித வாழ்க்கையை இலகுவாக்கிய விஞ்ஞானம் மறுபக்கத்தில் மனித வாழ்க்கைக்கு பல சவால்களையும் ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.

அதாவது விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கள் மனித வாழ்வின் ஆக்கத்துக்கு பயன்படுத்தாது அழிவிற்கு பயன்படுத்தப்படும் போது விஞ்ஞானம் மனித வாழ்விற்கு சவாலாக அமைகின்றது என்ற வாதம் உறுதிப்படுத்தப்படுகின்றது.

உதாரணமாக யுத்தங்களில் பயன்படுத்தப்படும் நவீன ஆயுதங்கள், போர் விமானங்கள், அணுக்குண்டுகள் போன்றவை வித்தைமிகு விஞ்ஞானத்தின் வளர்ச்சி பற்றி பெருமிதம் கொள்ளும் மனித குலத்துக்கு சவாலான காரணிகள் ஆகும்.

மனித உயிர்களை அழிக்கும் நவீன ஆயுதங்கள் போன்று தற் காலத்தில் கூடுதலாகப் பயன்படுத்தப்படும். கைத்தொலைபேசிகள், தொலைக்காட்சிகள் போன்றவையும் தவறாகப் பயன்படுத்தப்பட்டு மானுட மேன்மை தொடர்பான பண்பாடு, கலாசாரம் போன்றவற்றில் பாதிப்புக்களை ஏற்படுத்துவதனால் அறிவியல் உலகம் இவற்றையும் சந்தேகக்கண் கொண்டு பார்க்கின்றது.

## தொலைக்காட்சிகள்

இன்றைய நவீன நாகரிக வாழ்க்கையில் தொலைக்காட்சியே பிரதான பொழுதுபோக்குச் சாதனமாகப் பயன்படுத்தப்படுகின்றது. வீடுகளையே சினிமாத் தியேட்டர்களாக மாற்றுகின்ற மாபெரும் சாதனை தொலைக்காட்சிக்கு இருப்பதனால் பொழுதுபோக்கு விடயத் தில் கூடுதலான இடத்தைப் பிடித்துவிட்டது. சிகரெட், மது போன்ற வற்றுக்கு அடிமையாவது போன்று பலர் தொலைக்காட்சிக்கு அடிமை யாவதால் பல மாணவர்களுக்கு படிப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. சில குடும்பத் தலைவிகளுக்கு சமைப்பதற்கு கூட நேரம் கிடைப்ப தில்லை.

உண்மையில் கல்வி தொடர்பான அறிவியற் கருத்துக்களை பரப்புகின்ற சிறந்த ஊடகமாக தொலைக்காட்சிகள் பயன்படுத்தப் படலாம். பெரும்பாலும் இங்கு நடப்பது என்ன? அறிவியல் சார்ந்த நிகழ்ச்சிகளுக்கோ, ஆத்மீகம் சார்ந்த சமய வழிபாடுகளுக்கோ, இன்றைய தொலைக்காட்சிகளில் முக்கியத்துவம் கொடுப்பது மிகக் குறைவு. தரம் குறைந்த சினிமாப் படங்களுக்கும், சின்னத்திரை நாடகங்களுக்குமே கூடுதலான முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது.

"கொடுக்கிற தெய்வம் கூரையைக் கிழித்துக் கொண்டு வந்து கொடுக்கும்" என்று எமது மூதாதையர்கள் கடவுள் அருள் தொடர் பாகக் கூறுவது போன்று இன்றைக்கு எமது வீடுகளில் உள்ள அன்ரனாக்கள் மூலம் எமது வீடுகளுக்குள் புகும் சினிமா, சின்னத்திரை நடிக, நடிகையர்கள் தமது ஆபாசவசனங்கள், பாடல்கள் மூலம் எமது சமூகத்தை திசை திருப்பிக் கொண்டிருக்கின்றனர். எவ்வாறு திட்டமிட்டு கொலை செய்வது, கொள்ளையடிப்பது, கற்பழிப்பது போன்ற விடயங் களை தொலைக்காட்சிப் பெட்டிகளினூடாக எமது இனம் சமூகத்துக்கு ஆலோசனைகள் வழங்கிக் கொண்டிருக்கின்றனர்.

இதனால் பல உயிர்கள், உடமைகளை இழந்து பாதுகாத்த தமிழர் பண்பாடு, கலை, கலாசாரம் அழிந்து கொண்டிருக்கின்றது.

## கைத்தொலைபேசிகள்

கைத்தொலைபேசிகள் GSM என்று சுருக்கமான முறையில் அழைக்கப்படுகின்றன. இதன் கருத்து Global System for Mobile Communication ஆகும். அதாவது தகவல்களைப் பரிமாறுபவர்கள் அசைத்து கொண்டிருக்கும் நிலையில் செய்திகளைப் பரிமாறுவதற்கு கைத்தொலைபேசி சிறந்த உபகரணம் ஆகும்.

அத்துடன் இதனைப் பயன்படுத்துபவர்களை அடையாளம் காண்பதற்காக SIM காட் பயன்படுத்தப்படுகின்றது (Subscribers Identity Module) என்று அழைக்கப்படுகின்றது.

அத்துடன் சாதாரண தொலைபேசிகளிலும் பார்க்க மேலதிக வசதிகள் இதல் உள்ளன.

SMS எனப்படும் குறுஞ்செய்தி அனுப்பும் வசதிகள் (Short Message System) GPRS எனப்படும் வானொலி வசதிகள் General Package for Radio System, missed called தகவல்கள், Diverting System, Digital Camera போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இப்படியான பல வசதிகளைக் கொண்ட கைத்தொலைபேசிகள் தவறான முறையில் பயன்படுத்தப்படும் போது இது எமது சமூகத்துக்கு ஆக்கத்தை ஏற்படுத்தாது அழிவையே ஏற்படுத்தும் என்பதையும் நாம் மறக்க முடியாது. இதனால் தான் பாடசாலைகளில் கைத்தொலை பேசிப் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆகவே எமது மாணவர்கள் உள்ளிட்ட எமது சமூகம் கைத்தொலைபேசிகள், தொலைக்காட்சிகள் போன்றவற்றை தவறான முறையில் பயன்படுத்தாது மனித வாழ்வின் ஆக்கத்துக்கு பயன் படுத்தப்படுவதற்கு வழிப்படுத்த வேண்டியது தற்காலக் கல்விச் சமூகத்தின் பிரதான கடமையாகும்.

நன்றி

**திரு. சு. சிவநேசராசன்**

**ஆசிரியர்,**

**யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.**

# கல்லூரிக் கீதம்

**இராகம்:- ஹம்சத்வனி**

வாழிய நம் கலைக் கூடமே வாழ்க
வாழிய வாழிய வாழியவே
களனிகள் சூழ்ந்திடு கோவையம் பதியில்
விளங்கு நற் கிறீஸ்தவ கல்லூரி
உண்மையும் நேர்மையும் உவந்திட அளிக்கும்
உன்புகழ் என்றென்றும் வாழியவே. (வாழிய)

பல்புகழ் மலிந்திடும் பல பெரியோர்களைப்
படைத்து நற்பணி புரிந்தாய்
அவர் மிகு சேவையை ஏத்திடநன்னிலை
அடைந்த நல்நா டெமதே (வாழிய)

மனதினிலுன்றிறம் மதிப்பொடு நிலைத்திட
மகிழ்வோடு நாம் முயல்வோம்
கலை பல கவினுறக் கனிந்திட நல்வழி
காட்டிடு வாய் தாயே (வாழிய)

நிலமிசை நின்புகழ் நீடு வாழ்க
நின்பணி தொடர்ந்து என்றும் வாழ்க
நிலைபெறு கலைகளின் நிறைகுடமாக
நீ யென்றும் வாழிய வாழியவே (வாழிய)

# நன்றி நவிலல்



இச்சுவடு சஞ்சிகைக்கு ஆக்கங்கள் தந்து உதவியவர்களுக்கும், அச்சுப்பதித்து வழங்கிய பாரதி பதிப்பகத்தினருக்கும், அமரத்துவ அதிபர் தின நிகழ்வில் பங்கேற்று சிறப்பித்த அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நிர்வாகிகள்,

பழைய மாணவர் சங்கம்,

யா / கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

பாரதி பதிப்பகம், 430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம்.